Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 68 இரட்சியும் கர்த்தாவே, பக்தியுள்ளவன் ..... உண்மையுள்ளவர்கள் மனுப்புத்திரரில் குறைந்திருக்கிறார்கள் சங்.12:1 மார்ச் 2022 No.3

தேவனோடுள்ள ஒரு சந்திப்பு

Having an encounter with God

Henry Blackaby

நாம் தேவசமூகத்தில் வரும்போது அவர் சில அடிப்படையான மாற்றங்களை நம்மில் கொண்டு வருகிறார். வேதவாக்கியங்களில் இதைக் கண்டாலும், அவர் நம்மை சந்திக்கிறவர் என்பதை நாம் புரிந்து கொள்ளுவதில்லை. நாம் தேவ சமூகத்தில் வரும்போது நமது முக்கிய நோக்கம் அவரை சந்திப்பதாயிருக்க வேண்டும். ஆனாலும் தேவசமூகத்தில் காத்திருக்கிற நம்மில் மாற்றுருவாக்கம் காணப்படவில்லையே.

உங்களை தேவன் சந்திக்கும் நேரத்தைத் தீர்மானிப்பது நீங்களல்ல. அது ஒரு வேதவசனத்தின் மூலம் ஏற்படலாம். "வேத வசனம் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தைப் போல, ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாய் உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் யோசனைகளை வகையறுக்கிறதாயும்" எபி.4:12 செயல்படுகிறது. அது உங்களை தேவனுக்கு முன்பாக முற்றிலும் வெளியரங்கமாக்குகிறது. தேவன் உங்களை சந்திக்கும்போது நீங்கள் அதை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக அவர் உங்களைத் தூண்டி எழுப்புவார்.

ஏசாயா தேவனை சந்தித்தது :-

ஏசாயா தேவனை சந்தித்த விசேஷ சம்பவத்தை ஏசாயா 6-ம் அதிகாரத்தில் படிக்கிறோம். ஏசாயாவின் பிரச்சனை எங்கிருந்தது என்பதைக் குறிப்பாக தேவன் அறிந்திருந்தார். எனவே அவனது வாழ்வின் தேவைக் கேற்ற அடிப்படையான மாற்றத்தைக் கொண்டுவர ஏற்ற ஒரு சந்திப்பை ஏற்படுத்தினார். திடீரென அவன் தேவனுடைய பரிசுத்த பிரசன்னத்திற்குட்பட்டான். சிலர் தாங்கள் தேவனுடைய பரிசுத்தமான சமூகத்தில் இருப்பதைக் குறித்துப் பேசுகிறார்கள். நாமும் தேவனுடைய பரிசுத்தத்தைக் குறித்து பாடுகிறோம். உண்மையாகவே நாம் தேவ சமூகத்தில் இருப்போமானால், ஏசாயாவைப் போல, "ஐயோ, நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள மனுஷர் மத்தியில் வாசம் பண்ணுகிறவன் ...." ஏசா.6:5 எனக் கதறுவோம்.

தேவனுடைய பரிசுத்தமும் அவரது பிரசன்னமும் எப்போதும் நமது வாழ்வின் தேவையை வெளிப்படுத்தி அதன் மூலம் தேவனோடுள்ள ஆழமான உறவை நிலைப்படுத்துகிறது. ஏசாயாவின் சந்திப்பில் உடனடியாக அவனது உதடுகள் தொடப்படுகின்றன. பலிபீடத்திலிருந்து வந்த பொருளால் அவனது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்படுகிறது. பலிபீடத்திலிருந்து எடுத்து வரப்பட்ட அக்கினித்தழல் அவனுடைய உதடுகளைத் தொட்டபோது என்ன ஆச்சரியம்! அவனுடைய உதடுகள் சுத்திகரிக்கப்பட்டதோடு, அவனது செவிகளும் திறவுண்டன. உதடுகள்தான் தொடப்பட்டன. செவிகள் தொடப்படவில்லை. ஆனால் உதடுகள்தான் தேவ சத்தத்தைக் கேட்பதற்கு தடையாயிருந்துள்ளன. தேவன் பேசிக் கொண்டுதானிருந்தார். இப்போதுதான் ஏசாயா முதலாவதாக யாரை நான் அனுப்புவேன்? யார் நமது காரியமாய் போவான்? என்கிற சத்தத்தைக் கேட்டான். தேவனுடைய சந்திப்பாலும் அவனில் ஏற்பட்ட அடிப்படை மாற்றத்தாலும், தன்னிச்சையாக ஒரு பதிலைக் கூறுகிறான். "இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்" என்பதே அப்பதில் வச.8. ஏசாயாவுக்குத் தரிசனமளித்த அதே தேவன் இன்று இங்கே நம்மையும் சந்திப்பார்.

நமது தேசத்திற்காக ஜெபிப்பது :-

நாம் செய்ததும் செய்யத் தவறியதுமான காரணங்களால்தான் தேசம் இன்று இந்நிலைக்கு வந்திருக்கிறது. நமது தேசம் பயங்கரமான நிலையிலிருக்கிறது. வெவ்வேறு திசைகளில் தேசம் கீழிறங்கிச் செல்ல ஏதுக்களிருக்கின்றன. நாம் எத்தகைய ஜெபத்தினை செய்தபடியால் தேசத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதுதான் கேள்வி.

ஜெபத்தின் மூலமாக பரலோகத்தை அசைக்க முடியுமே.

ஒரு தனிநபரின் ஜெபம் கூட பாரத்தோடு ஏறெடுக்கும் போது தேசத்தில் பெரிய காரியங்கள் நடக்குமே. ஆனாலும் நாம் ஜெபித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியும் ஏன் மாற்றம் ஏற்படவில்லை?

நமது ஜெபத்தின் தரம் உயர வேண்டும். உங்கள் ஜெபம் அவரோடுள்ள தரமான உறவோடு ஏறெடுக்கப்படுகிறதா? உங்கள் ஜெபத்தின் மூலம் தேசத்திலும் உலகிலும் மாற்றங்கள் நிகழ நீங்கள் ஆயத்தமா? நீங்கள் தேவனோடு எப்படி நடக்கிறீர்கள்? உங்கள் தனிப்பட்ட ஜெபவாழ்வு எப்படியிருக்கிறது? தேவன் உங்கள் வாழ்வில் அதிகமாக செயல்பட என்னென்ன மாற்றங்கள் தேவை என்பதை சிந்தித்துப் பாருங்கள்!

மோசேயின் ஜெப வாழ்வு :-

தமது சமூகத்தில் நிற்கும்படி மோசேயை அழைத்த தேவன் தமது இருதயத்திலுள்ளதை அவன் கேட்கும்படி எதிர்பார்த்தார். அது மோசேயின் இருதயத்தை உடைத்து தேவனுக்கு முன்பாக அவன் நாற்பது நாட்கள் இரவும் பகலும் ஜெபத்தில் நிற்கச் செய்தது. அவன் கேட்ட காரியங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. எனவே அவன் ஆத்தும வியாகுலத்தால் நாற்பது நாட்கள் புசியாமலும் குடியாமலுமிருந்தான். பாவம் நிறைந்த மக்களுக்கும் தேவனுக்கு மிடையில் நின்று அவர்களுக்காகப் பரிந்து பேசினான். அவர்களைத் தண்டியாமல் விட்டுவிடும்படி தன் பெயரை ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போட அவன் மன்றாடினான். அவனுடைய ஜெப வாழ்வு தேவனுடைய இருதயத்தையே மாற்றிவிட்டது.

நீங்கள் எப்போதாவது ஜெபித்த போது, தேவன் தமது இருதயத்தை உங்கள் இருதயத்தின் மீது வைத்த படியால் உங்கள் இருதயம் உடைந்த துண்டா? ரோமர் 8:26-ல் நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று அறியாதவர்கள் என்று பவுல் எழுதுகிறார். இதற்கு தேவன் செய்யும் நிவாரணம் என்ன? தூய ஆவியானவரை நமக்குத் தந்தருளியிருக்கிறார். அவர் தேவனுடைய உள்ளத்தையும் இருதயத்தையும் அறிந்தவர். உடனடி செய்ய வேண்டியதை அவர் காண்பிப்பதால் எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதனை அறிந்து கொள்ள முடியும். எப்போதாவது நீங்கள் முழங்காலில் நின்று "ஆண்டவரே, எங்கள் தேசம் உடைந்து நொறுங்கு கிறதே, நான் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

1. வருகையின் தூதன் ஊழியத்தை உற்சாகமாய் தாங்கியும், குறிப்பாக வங்கி வழியாக காணிக்கை அனுப்பியும் பத்திரிகை வரத் தவறினால் தயவாய் தெரிவியுங்கள்.
2. ரசீது, நன்றி ஜெப கடிதம் இன்னமும் வராவிட்டால் தயவாய் தெரிவியுங்கள்.
3. **சிறப்பு காணிக்கை** (சந்தா மற்றும் காணிக்கை தவிர) அனுப்பிய அனைவருக்கும் ஒரு ஞாபகார்த்தம் அனுப்பியுள்ளோம். கிடைக்காவிட்டால் தயவாய் தெரிவியுங்கள்.

Mobile : ***9543221008***; Wattsapp : ***9489740295*** **ஆசிரியர்**

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

2022-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப

வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.

தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்

Rich Carmicheal

நமது ஆண்டவருடைய ஆவல், நாம் அவரை அறிந்து கொள்வதும், அவரோடு நெருங்கிய உறவில் வாழ்வதுமாகும். இது ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல் வரை தெளிவுபடுத்தப்படுகிறது. ஆதி.3:8-ல், அவர் ஆதாம் ஏவாளோடு ஏதேன் தோட்டத்தில் ஐக்கியத்தைத் தேடியதையும், வெளி.21:3-ல் தாம் சதா காலங்களிலும் தமது ஜனங்களோடு வாழ வாக்குப்பண்ணி அவர்கள் தேவனாயிருப்பதையும் வாசிக்கலாம். அவர் நம்மை அளவில்லாமல் நேசிப்பதோடு நாம் அவரை நமது முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் நேசிப்பதை அவர் விரும்புகிறார் மாற்.12:30. அவர் நமது வாழ்வில் செயல்பட்டு முடிவில் அவரோடுள்ள மிக ஆழமான உறவில் கொண்டுவந்து விடுகிறார். இந்த உறவிலிருந்து நாம் வெளியேறினாலும் நாம் மனந்திரும்பி அவரிடம் திரும்ப கிரியை செய்கிறார்.

இந்த இதழின் முக்கிய நோக்கம் இதன் செய்திகள் மூலம் நாம் அவருடன் ஆழமான உறவுகொள்ள வேண்டும் என்பதே. இந்த உறவு இல்லையென்றால் நீங்கள் மனந்திரும்பி, அவரை முழுமனதோடு தேட ஆரம்பிக்க வேண்டும்.

அவரது இரக்கம் நம்மை மனந்திரும்புதலுக்கு அழைக்கிறது ரோமர் 2:4. இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதிருங்கள் எபி.4:7. உங்கள் இருதயத்தை முழுவதுமாக திறந்தளியுங்கள். உபா.4:29-ன் படி "……உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய்".

கர்த்தரை வாஞ்சித்து நாடுதல்

கர்த்தரை வாஞ்சித்து நாடும் தன்மை உடையவன் தாவீது. "தேவனே நீர் என்னுடைய தேவன், அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும், விடாய்த்ததும், தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது; என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது, இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப் பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன்" சங்.63:1-2. "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையை பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" சங்.27:4. "என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று" வச.8.

பாவம் எவ்வாறு கர்த்தரோடுள்ள உறவைக் கெடுக்கும் என்ற கரிசனையோடு "தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன். ……. உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும் உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்" என்று 51-ம் சங்கீதத்தில் தாவீது கதறுவதைக் காண்கிறோம். தாவீது பரிபூரணனாயிருந்ததினாலல்ல, ஆனால் தேவனுடைய இருதயத்துக்கு அவன் ஏற்றவனாயிருந்தபடியால் தேவன் அவனைத் தெரிந்துகொண்டார். கர்த்தரை அதிகமாய் நேசித்து அவரோடுள்ள ஐக்கியத்தை வாஞ்சித்தான். கர்த்தருடைய வசனத்தையும் அவருடைய வழிகளையும் நேசித்து அவரைப் பிரியப்படுத்த ஆவலுள்ளவனாயிருந்தான். நம்பிக்கையற்ற சூழல்களிலும் கர்த்தரை நம்பி அவரை ஸ்தோத்தரித்தான். அவர் எல்லாவற்றிலும் மகிமைப்பட வேண்டும் என்ற வாஞ்சையுடையவனாயிருந்தான்.

அவர் எப்போது நம்மிடம் சேருவார்?

நாம் அவருக்காக வாஞ்சையோடிருந்து, நமது இருதயங்களையும், கவனத்தையும் முழுமையாக அவரிடம் திருப்ப வேண்டும். அவர் நம்மை சிருஷ்டித்தவர். அவரை அறிந்து கொள்ளவும் அவரைக் கிட்டிச் சேரவும் அவர் எதிர்பார்க்கிறார். அவர் உண்மையான ஜீவனுள்ள தேவன். எல்லாவற்றிற்கும் தகுதியானவர். அவரை நேசிக்கவும் சேவிக்கவுமே நாம் சிருஷ்டிக்கப்பட்டோம்.

நாம் அவரிடம் நெருங்கும்போது அவரும் நம்மிடம் சேருவதைக் காணலாம் யாக்.4:8. அவர் நம்மிடம் சேரும்போது நமது வாழ்வினை தமது அன்பினாலும், ஜீவன், வல்லமை, கிருபை, சிந்தை, உருக்கம், நோக்கம், சத்தியம், வெற்றி, பெலன், நம்பிக்கை, சமாதானம், சந்தோஷம் ஆகியவற்றால் நிரப்புவார். அப்போது நமது வாழ்வு ஆசீர்வதிக்கப்படும். நாம் பிறருக்கு சேவை செய்வதால் அவர்கள் வாழ்வும் ஆசீர்வதிக்கப்படும். எல்லா மகிமையும் அவருக்கே.

வரும் நாட்களில் நாம் அவரோடு இன்னும் அதிகமாகக் கிட்டிச்சேர ஆயத்தப்படுவோம். அதிக நேரத்தை ஜெபத்திலும், வேதவசனத்திலும் செலவிடுவோம். இது நமக்கு மட்டுமல்ல நம்மைச் சுற்றி வாழும் மக்களுக்கும் இன்றியமையாதது.

தேவ வசனத்தை தியானித்தல்

Meditating on God's word

Charles H. Spurgeon

"உமது கட்டளைகளை தியானிப்பேன்" சங்.119:15.

சில வேளைகளில் தனிமையானது கூட்டத்தை விடவும் அமைதியானது பேசுவதைவிடவும் ஞானமாயிருக்கும். கிறிஸ்தவர்களாகிய நாம் தனியாயிருந்து தேவனுக்காக காத்திருந்து தியானத்தின் மூலம் ஆவிக்குரிய பணிக்கான பெலனைப் பெற்றுக்கொள்வது அவசியம். தேவனுக்குரியவைகளை தியானிப்பதின் மூலம் உண்மையான போஷாக்கைப் பெறலாம்.

சத்தியம் என்பது ஒரு திராட்சப் பழ கொத்து. அதிலிருந்து ரசத்தைப் பெற அது அடிக்கப்பட்டு பலமுறை பிழியப்பட வேண்டும். அதைப் பிழிகிறவனுடைய கால்கள்

(3-ம் பக்கம் பார்க்க)

வாசகர் கவனத்திற்கு

உங்களில் சிலர் ரூபாய் 50, 100, 200 என்று அனுப்பியிருக்கிறீர்கள்; உங்களுக்கு ஏப்ரல் மாதம் வரை பத்திரிகை வரும்

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியூபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள்
Mobile : 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

தெரியவில்லையே" என்று கேட்டிருக் கிறீர்களா? நீங்கள் ஜெபிக்க வேண்டி யதை அவர் உங்கள் இருதயத்தில் தருவார். அப்போது தொடர்ந்து பாரத் தோடு ஜெபியுங்கள். தேவன் பதிலளிக் கும்வரை ஜெபியுங்கள்.

உங்கள் ஜெபவாழ்வும் சபையின் ஜெபவாழ்வும் சரித்திரத்தின் போக்கைத் தீர்மானிக்கவும், அழிவுக்கான அனேக விசைகளை தேசத்திலிருந்து அகற்றவும் ஏதுவாகும். தேசத்தில் இப்போது குடும்ப வாழ்வுகளில் அநேக இடையூறுகள் இருக்கின்றன. நல்லொழுக்கம் சீரழிந்து விட்டது. நாம் எண்ணிப்பார்க்காததும், கேள்விப்பட்டிராததுமான அனேக சம்பவங்கள் சாதாரணமாகிவிட்டன. தேவ ஜனத்தின் ஜெபம் எங்கே? ஜெபத் தின் விளைவாக தேசம் க்ஷேமமடையும் என்பது தேவ வாக்கு. ஆனால் தேவன் வல்லமையானவைகளைச் செய்வார் என்ற நம்பிக்கையின்றி கவலையீனமாக வும் சாதாரணமாகவும் ஜெபிக்கிறபடி யால் தேசத்தில் க்ஷேமத்தைக் காணமுடிய வில்லை.

தேவஜனம் தேவனோடு நெருங்கிய உறவுடன் வாழாவிடில் என்ன நடைபெறும்? அது அவரைக் கோபமூட்டும். "ஓரேபிலும் நீங்கள் கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கின தினால் கர்த்தர் உங்களை அழிக்கத்தக்க தான உக்கிரங்கொண்டார்" உப.9:8 என்று மோசே இஸ்ரவேலரிடம் கூறிய தை வாசிக்கிறோம்.

நீங்கள் இஸ்ரவேலரையல்ல, இஸ்ரவேலின் தேவனைப் பாருங்கள். நீங்கள் ஒரு ஆவிக்குரிய தலைவராகவோ, ஒரு பெற்றோராகவோ இருந்தால் தேவஜனம் தேவனுக்கு எரிச்சலூட்டி னால் அது அழிக்கப்படும் என்பதனை மனதில் வையுங்கள். சரித்திரத்தில் இன்று தேசம் இருக்கும் நிலை அழிவுக்கேது வானது. தேவனுடைய வல்லகரம் ஒன்றே அதைத் தடுத்து நிறுத்த முடியும்.

இஸ்ரவேலரது பாவங்கள் நிமித்தம் கோபங்கொண்டு அவர்களை அழிக்கப்போவதாக தேவன் மோசே யிடம் கூறினார். மோசேயிடமிருந்தே ஆரம்பித்து செயல்பட அவர் விரும்பி னார். உபா.9, 10 ஆகிய அதிகாரங்களில் மோசேயின் விடாமுயற்சியும், பாரமும் தேவனுடைய இருதயத்திற்கு ஒத்ததா யிருந்த படியால் அவனது ஜெபம் கேட்கப்பட்டு மக்கள் அழிவிலிருந்து காக்கப்பட்டதை வாசிக்கிறோம்.

தேவனுடைய இருதயத்தில் இருப்பதென்ன?

இதை அறிய விரும்புகிறீர்களா? உங்கள் பிள்ளைகளைக் குறித்து தேவனு டைய இருதயத்தில் இருப்பதென்ன? உங்கள் சபையைக் குறித்து அவருடைய இருதய பாரமென்ன? பாவம் செய்த படியால் சபையை தேவன் முடிவுகட்டி விடுவாரா? சபை மரித்துப் போவதை அவர் விரும்புவாரா? எபேசு சபையை அவர் கண்டித்தார். "நீ ஆதியிலிருந்த அன்பை விட்டுவிட்டாய்" என்று கூறிய தோடு எந்த இடத்திலிருந்து விழுந்தா யென்பதை உணர்ந்து மனந்திரும்ப ஆலோசனை கூறினார். இல்லாவிட்டால் விளக்குத்தண்டை அகற்றிப் போடுவ தாகவும் கண்டித்தார்.

ஜெபத்தில் ஒரு உன்னத நிலைக்கு உங்களைக் கொண்டு வர தேவன் விரும்புகிறார். அந்த நெருங்கிய உறவின் மூலம் அவர் தமது இருதயத் தையும் உள்ளத்தையும் உங்களுக்கு வெளிப்படுத்த எதிர்பார்க்கிறார். தேவனுடைய உள்ளத்திலிருப்பதை மோசே அறிந்தவுடனே அவன் மன்றாட ஆரம்பித்துவிட்டான். தேவன் தமது வார்த்தையின் மூலம் பேசும்போது அதை விசுவாசிக்கிற மக்களைக் கண்டு பிடிக்கிறார்.

தேவ ஜனங்கள் மட்டுமே அவரது பணியை நிறைவேற்ற முடியும். அவர் களுக்கு இது ஒரு தெய்வீக வாய்ப்பு. ஏனெனில் தேவன் அவர்கள் இருதயங் களில் அசைவாடி அவர்களோடு ஒரு நெருங்கிய உறவை ஏற்படுத்துகிறார். ஏனெனில் அவர் தமது உள்ளத்திலும் இருதயத்திலுமுள்ளவற்றை அவர்கள் அறிந்து கொள்ளவும், பின்பு அதன்படி செய்யவும் விரும்புகிறார். இந்த அனுப வத்தை நீங்கள் விரும்புகிறீர்களா? எனது வாழ்வை முற்றிலும் அர்ப்பணிக்க ஆயத்தம் என்று தேவனிடம் ஜெபிக்க முன் வருவீர்களா? அவருடைய இருத யத்தை அவர் உங்கள் இருதயத்தின் மீது வைக்க அவர் மீது நம்பிக்கை வைத்தால் அவர் அப்போது அப்படிச்செய்து உங்களை பலப்படுத்துவார். தேவன் தாமே தமது வல்லமையான பிரசன்னத் தால் உங்களை பலப்படுத்தி பயன் படுத்துவாராக.

பாரமுள்ள இடைவிடாத போராட்ட ஜெபம்

ஜெபம் என்பது நீங்கள் விரும்பு வதை தேவன் அளிப்பதற்கான தருண மல்ல. அது நாம் தேவ சமூகத்திலிருப் பதும் அவர் தமது கிருபையால் தமது இருதயத்திலும் உள்ளத்திலுமிருப்பதை நமக்கு வெளிப்படுத்துவதே ஜெபம். அந்த சந்திப்பு நம்மில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தும். எனவே நாம் வாழும் வழிமுறைகளிலும், நமது பேச்சிலும், திட்டங்களிலும், நமது சமயத்தைச் செலவு பண்ணுவதிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

தேசம் ஒரு இக்கட்டான கால கட்டத்தில் இருப்பதை எண்ணிப் பார்க் கிறீர்களா? அவரையும் அவரது இருதயத் தையும் அறிந்தவர்களும் ஜெபத்தில் பாரமுள்ளவர்களுமான மக்கள் மூலம் ஒரு பலத்த தொடுதல் ஏற்படுமட்டும் ஜெபிக்கிறவர்கள் வேண்டும். சிறிய ஜெபங்கள் போதாது. பாரம் நிறைந் ததும், இடைவிடாததும், போராடுகிறது மான ஜெபம் தேவை.

லூக்கா 18-ம் அதிகாரத்தில் இயேசு "சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும்" என்று கூறி யிருக்கிறார். இதற்கு உவமையாக தேவ பயமற்ற ஒரு நியாயாதிபதியிடம் ஒரு விதவை நியாயத்திற்கு வந்ததாகவும், நியாயம் கிடைக்குமட்டும் அவள் அவரை தொந்தரவு செய்து கேட்ட தாகவும் கூறினார். மேலும் நமது பரலோக பிதா இரவும் பகலும் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களின் குரலைக் கேட்பார் என்றார். அதோடு ஒரு கேள்வியையும் குறிப்பிட்டார். ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ? லூக்.18:8.

தேவன் நமது இருதயங்களைத் திறந்து பார்த்தால், அவரை அறிந்து, அவரை விசுவாசித்து, அவரது சமூகத்தில் தரித்திருக்கும்படி அர்ப்பணித்த மக் களைக் காண முடியுமா? தேவனுடைய இருதயத்தோடும், அவரது சிந்தை யோடும் ஜெபிக்கிறவர்களை தேவன் தேடுகிறார். தனியாகவோ, தம்பதிய ராகவோ, குடும்பமாகவோ, சபை யாகவோ ஜெபிக்கச் சொல்லுகிற நீங்கள் உண்மையாக தேவனுடைய இருதயத் திலும் உள்ளத்திலும் இருப்பதை அறிவீர் களா? அல்லது 'நான் ஒரு தேவ பிள்ளை தான், ஆனாலும் நான் உத்தம மாக ஜெபிக்கவில்லை' என்று சொல்லப் போகிறீர்களா?

தேவன் ஒரு காரியத்தைச் செய்வ தற்கு முன்னால் அவரிடம் ஜெபத் தோடு வந்து, ஜெபத்தின் பாரத்தை ஏற்றுக் கொள்ளும் ஒருவரை தேவன் தேடுகி றார். நாம் அப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டுமே. (2 கொரி.5:9-11 படிக்க)

(2-ம் பக்க தொடர்ச்சி)

அவைகளை மிதிக்காவிட்டால் ரசம் வடிந்து வராது. அதிகமதிகமாக மிதிக்கப் படும்போது தான் ரசம் வீணாகாமல் முழுவதும் கிடைக்கும். எனவே சத்திய மாகிய திராட்சக் கொத்தை தியானிப் பதின் மூலமாகவே அதிலுள்ள ஆறு தலைப் பெறமுடியும்.

உணவை நாம் வாயினுள்ளே போடுவதால் அது நமது சரீரத்துக்கு வளர்ச்சியைத் தருவதில்லை. ஆனால் அது உள்ளே சென்று ஜீரணமடையும் போதுதான் தசைகளும், நரம்புகளும், எலும்புகளும் உடலின் அனைத்து பகுதிகளும் பயன்பெறமுடியும். அது போலவே ஆத்துமாவும் கொஞ்சநேரம் மட்டும் வேதவசனத்தைக் கவனிப்பதால் போஷாக்கு பெறுவதில்லை. கேட்பதும், வாசிப்பதும், குறிப்பெடுப்பதும், கற்றுக் கொள்வதும் உள்ளான சௌக்கியம் முழுமை பெற ஏதுவாகின்றன. இந்த உள்ளான சௌக்கியத்துக்கு அதிகமான தியானம் அவசியம்.

நாம் அநேக பிரசங்கங்களைக் கேட்டும் தெய்வீக வாழ்வில் முன்னே றாமல் இருப்பது ஏன்? அந்தரங்க அறை தியானம் செய்வதில்லை. கோதுமை நமக்கு விருப்பமான உணவாக இருந்தா லும் அதை அரைக்க வேண்டுமே. விளைந்த தானியம் அறுவடை செய்யப் பட வேண்டுமே. மரத்தில் பழுத்துத் தொங்கும்போது பழங்களைப் பறிக்கா மலும், கால்களுக்கடியில் பாய்ந்து ஓடும் நீரைக் குனிந்து குடிக்காமலுமிருக்கி றோம். ஆண்டவரே இப்படிப்பட்ட தவறுகளிலிருந்து எங்களை விலக்கி இரட்சியும்.

காலை நேரம் தேவனோடு

The morning hour with God

Andrew Murray (1828-1917)

ஒரு நாள் ஆரம்பிக்கிற காலை வேளை தேவனுடையது, கிருபையான ஈவு. இதை தேவனோடு செலவிடுவதால் அந்த நாளின் வேலைகள் ஆசீர்வதிக்கப் படவும், எந்த சோதனையையும் மேற் கொள்ளும் வல்லமையின் நம்பிக்கை யையும் நாம் பெறலாம். காலைப் பொழுது நம்மை தேவனோடு இணைத்து, அதன் மூலம் நெருக்கடி யான நேரங்களில் ஆத்துமா பாதுகாவ லுடனும் சுத்தமாகவும் இருக்க ஏது வாகிறது. காலை நேர உறவு ஆண்ட வரைத் துதிக்கவும், மகிழவும் காரணமா யிருப்பதோடு, நம்மைப் புதுப்பித்து பலப்படுத்தி அவருக்கான அர்ப்பணத் திலும் விசுவாசத்திலும் வளரச் செய்கிறது. கீழ்ப்படிதலின் வாழ்வு நாளுக்கு நாள் வலுவடைகிறது.

நோக்கக் கொள்கை

காலத் தியானப்பொழுதை ஒரு கடமையாகவோ, மார்க்க சம்பந்தமான ஒரு பகுதி என்றோ நாம் எண்ணினால் அது விரைவில் ஒரு சுமையாக மாறி விடும். மேலும் நமது சொந்த மகிழ்ச்சிக் காகவும், பாதுகாவலுக்காகவும் அதை பயன்படுத்தினால் அது உண்மையான பலனைத் தருவதில்லை. தேவனோடுள்ள உறவின் மீதுள்ள வாஞ்சை ஒன்றே இதற்குத் தேவை.

இதற்காகவே நாம் தேவனு டைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டோம். நித்தியத்தின் நம்பிக்கையும் இதையே சார்ந்துள்ளது. நாம் உத்தம ஆசீர்வாத வாழ்வைக் கடைபிடிக்க எப்போதும் இது உதவியாயிருக்கிறது. தேவனை இன்னும் அதிகமாக அறியவும், அவருடைய அன்பு பெலன் ஆகியவற்றால் நமது வாழ்வு நிரம்பவும் அவர் காலை தியானத்திற்காக நம்மை அழைக்கிறார்.

இந்தக் காலை தியானவேளை நமது ஆவிக்குரிய வாழ்வு சோதிக்கப் பட்டு பலப்படுத்தப்பட காரணமாயிருக் கிறது. இங்கு தேவனே எல்லாவற்றிற்கும் எல்லாமானவர் என்பது தீர்மானிக்கப் படுகிறது. நமது வாழ்வு கீழ்ப்படிதல் நிறைந்ததாயிருக்க வேண்டும், எல்லாவற் றிற்காகவும் நம்மை அவரது கரங்களில் ஒப்புவித்துவிட்டால் பகல் முழுவதும் வெற்றிபெற அது உதவியாயிருக்கும் எனக் கற்றுக் கொள்கிறோம். காலை தியானத்தின் மூலம், நாம் அவரை முழு மனதோடு அவரை நேசிப்பதே நமது நோக்கம் என்பதை நிரூபித்துக் காண்பிக் கிறோம்.

காலை தியானத்தின்போது தேவன் தமது பிரசன்னத்தால் நம்மை சந்தித்து ஆசீர்வதிப்பது முக்கியம். அவரது தூய சித்தத்திற்கு நாம் நம்மை ஒப்பு வித்து, அவர் நம்மீது பிரியம் வைப்பதால் நம்மீது தம் கரத்தை வைத்து ஆசீர்வதித்து, 'உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ' என்று சொல்லு வதைக் கேட்க வேண்டும். ஒவ்வொரு நாளும் இவ்வாறு கற்றுக் கொள்ளும் போது நாமாகவே இந்த அனுபவத்தை வாஞ்சிக்க அறிந்து கொள்வோம்.

வேதத்தை வாசித்தல்

காலை தியான வேளையில் வேதத்தை வாசிக்கும்போது கவனிக்க வேண்டிய சில காரியங்களுண்டு.

1. நமக்குப் பாதைகாட்ட வேண்டிய வேத வசனம் நம்மைத் தடுத்து அவரை விட்டு நம்மை மறைந்துவிடாமல் கவன மாயிருக்க வேண்டும். நாம் வாசிக்கும் போது கண்டுகொள்ளும் உண்மைகளால் சந்தோஷமடையலாம். ஆனால் அது மூளை அறிவு மட்டுமே. அது நம்மை தேவனுக்குக் காத்திருக்கவும், அவரை மகிமைப்படுத்தவும், அவரது கிருபை யைப் பெற்று அவரது வல்லமையால் நமது வாழ்வு இனிமை யையும் தூய்மை யையும் பெறாவிடில் வேதவாசிப்பு தியானம் உதவிக்குப் பதிலாக தடையாக மாறிவிடும்.

2. வேதவசனத்தைப் புரிந்துகொள்ள தூய ஆவியானவரின் ஒத்தாசை தேவை. தேவன் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்ளும்போது, வசனம் நமக்குள் புகுந்து, நமது உள்ளான வாழ்வில் கிரியை செய்யும். இது பரலோக பிதா, பரத்திலிருந்து அருளிய வார்த்தை, தெய்வீக இரகசியங்கள் அடங் கியது, அதின் செய்திகள் முக்கியமா னவை. எனவேதான் தேவன் தூய ஆவி யானவரை நம்மில் தந்து அதை விளக்க வும், உள்ளாக எடுத்துக் கொள்ளவும் உதவி செய்கிறார். நாம் பணிவுடன் கற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தைத் தரவும், அவரது வார்த்தை நமது இரு தயங்களில் கிரியை செய்யவும் விரும்பு கிறார்.

தூய ஆவியானவர் நமக்குக் கொடுக்கப்பட்டது, நாம் அவரால் நடத்தப்படுவதற்கும் அவரோடு நடக்கவும், அவரது ஆளுகையின் கீழ் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து காட்டமே. அவரது நடத்துதலுக்கு நாம் நம்மை ஒப்புவிக்காவிட்டால் அவர் காலையில் நமக்குப் போதிக்க முடியாது. ஆனால் பொறுமையுடன் இதைச் செய்தால் புதிய கருத்துக்களையல்ல, வார்த்தை யின் வல்லமையை இருதயத்தில் பெற்று அவரது போதனைகளின்படி வாழ முடியும்.

உங்கள் ஜெப அறை வகுப் பறையாகவும் உங்கள் காலை தியானம் வேதத்தைக் கற்றுக்கொள்ளும் நேரமாக வும் அமையட்டும். இதன் மூலம் நீங்கள் தூய ஆவியானவரின் சோதனையை சார்ந்து பணிவுடன் வாழ்வீர்களாக.

3. பூரண கீழ்ப்படிதலின் அர்ப்பணத் தோடு வேதவசனத்தைப் படியுங்கள். கிறிஸ்துவும், அப்போஸ்தலரும் வசனத் தைக் கேட்டும், அதன்படி செய்யாத வர்களைக் குறித்துக் கூறியிருக்கிறார்கள். வாஞ்சையும் நோக்கமுமின்றி வேத புத்தகத்தை படித்தால் கீழ்ப்படியாமை யால் இருதயம் கடினப்பட்டுப் போக ஏதுவாகும்.

தேவ சித்தத்தை உங்களால் நிறைவேற்ற முடியாவிட்டால், அதற்கு தேவையான கிருபையை கேட்டுக் பெற்றுக் கொள்ளுங்கள். தேவன் தமது வார்த்தைகள் மூலம் நாம் என்ன செய்ய வேண்டும், அதற்கு என்னென்ன கிருபை கள் தந்திருக்கிறார் எனக் குறிப்பிட்டி ருக்கிறார். இதனைக் கவலையீனமாக வாசிப்பதும் இதற்கு கீழ்ப்படியாம விருப்பதும் நல்லதல்ல. 'ஆண்டவரே, உமது சித்தம் எதுவோ அதையே செய்யும் பழக்கத்தை என்னில் தாரும்' என்று ஜெபிப்போம். தன்னிச்சையான கீழ்ப் படிதலோடும் அர்ப்பணிப்போடும் வேதவசனத்தை வாசிப்போம்.

4. தேவனுடைய சித்தத்தை முழு வதுமாக அறிந்து கொள்ளும் ஆழமான வாஞ்சையோடு அதை வாசிக்க வேண் டும். புரிந்து கொள்ள முடியாத கடினங் களோ அல்லது மேலான கட்டளை களோ, தெய்வீக வழிநடத்துதலோ தேவைப்பட்டால் அவை தெய்வீக போதனைக்கு உங்களை வழிநடத்தட் டும். மிகவும் எளிதானதும், உற்சாகப் படுத்துவதுமான பகுதிகளல்ல, உங்களை தேவனண்டைக்குத் துரத்தக்கூடிய பகுதி களே மிகவும் ஆசீர்வாதமானவைகள்.

தேவன் தாமே, நீங்கள் எல்லா ஞானத்தோடும் ஆவிக்குரிய விவேகத் தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினால் நிரப்புவாராக கொலோ.1:9. ஜெப அறையில் தான் இந்த அதிசய பணி நடைபெற வேண்டும். நீங்கள் செய்யும் படி தேவன் சொல்லும் காரியங்களைக் குறித்து, நீங்கள் உறுதிப்படும்போது அதைச் செய்ய தேவன் பெலன் தருவார். அவரது சித்தத்தை அறியும் ஆவல் நமக்கு வேண்டும். அவர் அடிக்கடி அதனை வெளிப்படுத்துவதால் நாம் அதைச் செய்யக்கூடியவர்களாகிவிடுகிறோம்.

அதிகாலை தியானத்தைத் தீர்மானத்துடன் செய்கிறவர்களுக்கு தேவன் வல்லமை அளிக்கிறார். தேவ ஆவியானவர் தேவசித்தத்தை நமக்கு வெளிப்படுத்தும்படி மறுபடியும் நம்மைத் தாழ்த்தி அர்ப்பணிப்போம். அவரது வாக்குத்தத்தங்கள் முற்றிலும் உண்மையானவைகள்.

ஜெபம்

1. ஜெபத்தின் மூலமாகவே நீங்கள் தேவ பிரசன்னத்தைப் பெறுவீர்கள். தேவனு டைய முகத்தைக் காண்பது, அன்போடு அவர் உங்களை பார்க்கிறார் என்ற நிச்சயம், உங்களை கவனித்து, உங்களில் கிரியை செய்கிறார் என்ற மேலான காரியங்களில் கவனம் செலுத்துங்கள்.

நாள் முழுவதும் தேவ பிரசன்னம் நம்மோடிருக்க காலை தியானம் நமக்கு முத்திரையை அளிக்கிறது. தேவன், தேவ அன்பு, அவரது சித்தம், அவரது தூய்மை, அவரது ஆவி நம்மில் தங்கியிருப்பது, மக்களுக்காக உழைக்க அவர் தரும்

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

வல்லமை போன்றவை தவிர வேறெது வும் நமக்குத் தேவையில்லை. நெருங்கிய உறவைத்தவிர வேறெவ்விதத்திலும் இவை களைப் பெறவும் முடியாது. காலைப் பொழுது ஒன்றே இதற்கு ஏற்ற காலம்.

தேவனோடுள்ள தொடர்பு குறைவினாலேயே மேலோட்டமான வாழ்வும் பெலவீனமும் ஏற்படுகின்றன. தேவன் ஒருவரே எல்லா அன்புக்கும், நன்மைக்கும், சந்தோஷத்திற்கும் ஊற்றும் உறைவிடமுமானவர். எனவே அவரோ டுள்ள உறவு நமக்கு உண்மையும் மேன்மையுமான மகிழ்வை தருகிறது. எனவே காலையிலே அவரது சமூகத்தில் தரித்து அவருடன் உறவு கொள்வது முதன்மையாயிருக்க வேண்டும்.

2. காலை தியானத்தில் முழுமையான கீழ்ப்படிதலை புதுப்பிப்பது முக்கிய பகுதியாயிருக்க வேண்டும்.

அனைத்து பாவங்களும் தவறா மல் அறிக்கை பண்ணப்பட வேண்டும். தேவனைத் துக்கப்படுத்தும் பகுதிகள் பிடுங்கி எறியப்பட வேண்டும். தூய நடக்கையைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். பிரவேசிக்கும் நாள் தேவனுக்குக் கீழ்ப்படியும் ஒரு நாளாகத் தீர்மானிக்கப்பட வேண்டும்.

அவருடைய சித்தத்தின்படி ஜெபிப்பதே அல்லாமல் தேவனுடைய அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற வழி ஏதுமில்லை. தேவனுடைய சித்தத் திற்கு உங்களை முற்றிலுமாக அர்ப் பணித்து விடுங்கள். அவரது சித்தத்துக்குக் கீழடங்க அவரது பெலனைப் பெற ஜெபியுங்கள். அப்போது அதற்குரிய பெலனை பெறுவீர்கள். உங்கள் காலை ஜெபம் 'காலை பலி' யாக ஏறெடுக்கப் படட்டும். உங்கள் சுயம் பலிபீடத்தில் தகன பலியாகட்டும். முழுமையான கீழ்ப் படிதலுக்கான அளவு தேவனுக்கு நேராக நம்பிக்கையின் அளவுக்கேற்ற படியிருக்கும்.

3. உண்மையான ஜெபமும் தேவனோடுள்ள ஐக்கியமும் ஏற்பட நாம் அமர்ந்திருந்து காத்திருந்து தேவன் என்ன பதிலளிக்கிறார் எனக் கேட்க வேண்டும். இது தூய ஆவியானவரின் பணி. அவர் தேவனுடைய குரலாயிருக்கிறார். நமது ஜெபம் கேட்கப்பட்டுவிட்டது என்ப தனை இருதயத்தின் ஆழத்தில் நம்பிக்கை யாகத் தருகிறார். **நாம் அவருக்குப் பிரியமானவர் களாயிருப்பதால் பிதா நமக்காக எல்லாவற்றையும் செய்யவிருக்கிறார்.** அமைதியான விசுவாசம் தேவன்மேல் நம்பிக்கை வைத்து, அமைதியான இருதயம் தாழ்மையுடன் தேவனுக்கு முன்பாகப் பணியும்போதும், அவரே எல்லாவற் றிற்கும் எல்லாம் என்று ஒப்புக் கொள்ளும் போதும் நாம் கேட்பதை தேவன் அருளிச் செய்வார்.

4. உங்கள் ஜெபம் பிறருக்கான மத்தி யஸ்த அன்றாட்டு ஜெபமாக இருக்க வேண்டும். இயேசுவின் கீழ்ப்படிதல் பிதாவுடன் தொடர்புடையதாகவும் பிறருக்காக செயல்படுவதாகவும் இருந்தது.

மன்றாட்டு ஜெபம் மேன்மை யானது. ஆபிரகாமையும், இஸ்ரவேலை யும், நம்மையும் பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்கவே தேவன் தெரிந்து கொண் டார். நாம் இராஜரீக ஆசாரியக் கூட்டம். ஆசாரியர் பிறருக்காக ஜெபிக்கிறவர்கள். சுய நன்மைக்காகவும், சந்தோஷத்துக் காகவும் ஜெபிக்கிற ஜெபம் முழுமை யான பலனைத் தருவதில்லை.

நம்மைச் சுற்றிலும் வாழும் ஆத்துமாக் களுக்காக உண்மையான பாரம் உங்களுக்கு உண்டா? அவர்களுடைய பாவத்திற்காக வும், தேவைகளுக் காகவும், தேவ ராஜ்யம் விரிவடைவதற்காகவும் ஜெபிக்கிறோமா? இத்தகைய ஜெபம் காலை தியானத்தை சுத்திகரித்து, புதிய விருப்பத்தைத் தோற்றுவிக்கும்.

தேவன் தமது மக்களை அற்புத மான பரலோக, உன்னத வாழ்வுக்கு அழைத்திருக்கிறார். **காலை தியானம் உங்க ளுக்கு பரலோகத்தைத் திறந்துளிக்கும் வாசலாக அமையட்டும்.** இதன் மூலம் ஒளியும், வல்ல மையும், உங்கள் வாழ்வில் பிரவேசிக் கட்டும். இது அந்த நாள் முழுவதும் நீங்கள் தேவனோடு நடப்பதற்கு ஏதுவாக அமையட்டும்.

தேவனோடு உடன் வேலையாட்கள்

Workers with God

David Tryon

கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர் களுக்கு பவுல் கடிதம் எழுதும்போது தனது உடன் பணிபுரிபவர்களைக் குறித்தும், தன்னைக் குறித்தும், "நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்கள்" *1கொரி.3:9* என்று எழுதுகிறார். அனைத்து கிறிஸ்தவர்களுக்குமான அழைப்பு இது. நாம் தேவனுக்காக மட்டுமல்ல, அவரோடு அவருக்காக பணி செய்கிற அனைவரையும் இது குறிக்கிறது. நாம் தேவனோடு நல்முறையில் ஒத்துழைக்க அவர் எப்படி பணியாற்றுகிறார் என்ப தனை அறிந்திருக்க வேண்டும். இல்லா விட்டால் நாம் அவரோடு பணி செய்வ தற்கு பதிலாக அவருக்கு எதிராகப் பணி செய்கிறவர்களாயிருப்போம்.

மாற்கு *4:26-27* வசனங்களில் அவர் எப்படி பணி செய்கிறார் என்பது ஒரு உவமையால் தெளிவுபடுத்தப் படுகிறது. "பின்னும் அவர் அவர்களை நோக்கி : தேவனுடைய ராஜ்யமானது ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து, இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க அவனுக்குத் தெரியாத விதமாய் விதை முளைத்துப் பயிரா கிறதற்கு ஒப்பாயிருக்கிறது". இதிலிருந்து தேவனுடைய பணியைக் குறித்து நாம் கற்றுக் கொள்வதென்ன?

தேவ பணி சிறியதாக ஆரம்பிக்கிறது

விதை மிகச் சிறியது. மிகச் சிறிய பொருளிலிருந்து எந்தப் பெரிய பணி யையும் நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் தேவனுடைய பணி இப்படித் தான் ஆரம்பித்தது. "ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்தான்". வலிமை, உருவம், வேகம் ஆகியவை உலகத்தில் புகழப்படுகின்றன. தேவன் மிக மெதுவாக ஒழுங்கற்ற உலகை மறு உருவாக்கம் செய்ய ஆரம்பித்தார். பெரிய உருவத்தின் மேலுள்ள நாட்டம், அதிக எண்ணிக்கை ஆகியவை தேவ பணியினை ஊனப்படுத்தியிருக்கலாம். மண்ணில் மனிதன் புதைத்து வைக்கும் வெடிகுண்டு போன்றதல்ல. தேவ ராஜ்யம் கட்டப்பட அவரது பணி ஒரு சிறு விதையிலிருந்துதான் ஆரம்பிக்கிறது.

தேவனுடைய பணி மறைந்திருக்கிறது

நிலத்தில் போடப்பட்ட விதை கண்பார்வையிலிருந்து மறைந்து காணப் படுகிறது. ஆனால் பணி இரகசியமாகவும் அமைதியாகவும் நடைபெற்றுக் கொண்டே யிருக்கிறது. இவ்வாறு தேவன் தமது அநேக பணிகளை மறைத்தே வைத்திருக் கிறார். எனவேதான் தேவ பணியாள் விசுவாசமுள்ளவனாயிருக்க வேண்டும். தேவன் காணப்படாவிட்டாலும் அவர் இருக்கிறார் என்ற உணர்வே விசுவாசம். தேவனோடு உடன் வேலையாட்களா யிருக்கிற நாம் அவர் பணிசெய்கிறார் என்பதற்கு சான்றுகளைத் தேடலாகாது. தேவனுடைய வெற்றியுள்ள பணியாளர் கள் அனைவரும் விசுவாச வீரர்களா யிருந்தனர். *எபி.11:27*-ன் படி அதிசய மானவரைத் தரிசிக்கிறது போல உறுதி யாயிருந்தார்கள். அவர்கள் தாங்கள் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனார்கள் *எபி.11:8*. தேவன் செய்கிற பணியில் சிறு பகுதியை மட்டுமே மனித கண்கள் காணுகின்றன. நிலத்தில் விதைக்கப்பட்ட விதையைப் போல அதன் பெரும் பகுதியும் மறைந்தேயிருக்கிறது.

தேவ பணி வேகம் குறைந்தது

யாக்கோபு தனது நிருபத்தில் : "..... இதோ பயிரிடுகிறவன், பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று முன்மாரியும், பின்மாரியும் வருமளவும் நீடிய பொறுமையோடே காத்திருக் கிறான்" *5:7*. தேவனோடு உடன் வேலை யாட்களாகப் பணிபுரிய பொறுமையைக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர் ஆத்திரப்படுவதில்லை. அவர் நித்திய மானவர். அவரது பார்வையில் ஆயிரம் ஆண்டுகள் நேற்று கழிந்தது போல காணப்படுகிறது. அவர் தமது கால அட்டவணைப்படி செயல்படுகிறவர். ரோமர் *15:6*-ன் படி அவர் பொறுமையின் தேவன்.

ஆண்டவராகிய இயேசு இவ்வுல கில் வருவதற்கு எத்தனையோ நூற் றாண்டுகளின் ஆயத்தம் தேவையா யிருந்தது. அன்றிலிருந்தே தமது இறுதி வெற்றிக்காக பொறுமையோடே செயல் பட்டுக் கொண்டிருக்கிறார். தமது கிரீடம் சூடும் நாளுக்காகப் பொறுமையுடனி ருக்கிறார். நாமும் அவரோடே பணி யாற்றுகிறவர்களாகையால் "கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப் பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறு மைக்கும் நேராய் நடத்துவாராக" என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார்.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

தேவ பணி நமது புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டது

தேவனுடைய அற்புதமான செயல்முறைகளில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே நாம் புரிந்துகொள்ள முடியும். நாம் நமது சொந்த அபிப்பிராயங்களின்படி அவரும் நடக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அதனால் தோல்வியுமடைகிறோம். அவருடைய வழிகளும் செயல்களும் மனித புரிந்து கொள்ளுதலுக்கு மிகவும் அப்பாற்பட்டவை என்பதைத் தாழ்மையுடன் உணர்ந்து கொள்ளுவது அவசியம். அவரது சர்வ வல்லமைக்கு முன்பாக நாம் பணிந்து குனிய வேண்டும். அவரது போதனைகளுக்கு அடங்கி நடக்க வேண்டும். அவரது ஒளிக்கும் வழிநடத்துதலுக்கும் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் நமது குறுகிய புரிந்து கொள்ளுதலுக்கும், ஆழமற்ற வழிமுறைகளுக்கும் நம்மை நடத்திச் செல்லுவோம். அவை தேவனுடைய இரகசியமான மிகப்பெரிய அறிவுக்கு எதிரானவை. மிகவும் தகுதியானதும் புத்தியுள்ளதும் எதுவென்றால் : "தேவன் எதைச் செய்கிறார், எதைச் செய்ய வில்லை என்பதை நாம் இந்த சன்னல் பின்னலான உலகில் கற்றுக்கொள்ள வேண்டுமேயொழிய, நாம் நினைத்ததை தேவன் நிறைவேற்றவில்லை என்ற கசப்பான ஏமாற்றமடையக்கூடாது" என்கிறார்.

தேவன் தமது சொந்த சித்தத்தை நிறைவேற்றுவார். அவருக்கு முன்பாக நாம் தாழ்மையுடன் பணிந்து அவரது இரகசிய செயல்களை அங்கீகரிப்போம்.

தேவ பணி நிச்சயமானது

'விதை முளைத்து வளர வேண்டும்'. தேவனுடைய செயல்களின் விளைவு நிச்சயமானது. சில வேளைகளில் அது விரைவாகவோ அல்லது சில வேளைகளில் தாமதமாகவோ நடைபெறலாம். அவருடன் இணைந்து செயலாற்றுபவர்கள் முழுமையான எதிர்பார்ப்புடைய இருதயமுடையவர்களாயிருக்க வேண்டும். சங்.126:6-ன் படி, ".... அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்". இது நிச்சயமானது. உலக அளவில் அறுவடையில் தோல்வி ஏற்படலாம். ஆனால் ஆவிக்குரிய உலகில் அறுவடை தோல்வியடைவதில்லை. தேவனுடைய பணி நிச்சயமானது.

ஓசியா 6:3-ன் படி "அவருடைய புறப்படுதல் அருணோதயம் போல ஆயத்தமாயிருக்கிறது." இரவின் அடர்ந்த இருளின் நேரத்தைத் தொடர்ந்து, அருணோதயம் ஏற்படுவது போல, தேவனுடைய செயலின் முழுமையான பலன் அவரது காலையில் வெளிப்படும். "அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்துக்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" ஏசா.55:11.

ஜெபக்குறைவிலிருந்து விடுதலை

Deliverance from Prayerlessness

Andrew Murray (1828-1917)

ஜெபக்குறைவாகிய பாவம் பெரும்பாலும் அனைவரிடமும் காணப்படுகிறது. அநேகர் இதை ஒரு பெலவீனம் என்கிறார்கள். ஜெபக்குறைவு ஆவிக்குரிய வாழ்வை பலவீனப்படுத்தும். ஆயினும் இந்த பெரிய தவறை அநேகர் உணரவில்லை.

தேவனுக்கு நிந்தையைக் கொண்டு வருகிறது

நமது தேவன் பரிசுத்தர். அவர் மகிமை நிறைந்தவர். அவரிடம் வந்து நமது தேவைகளைக் கேட்கவும், அவரது ஐக்கியத்தினால் வரும் ஆசீர்வாதத்தைப் பெறவும் அவர் நம்மை அழைக்கிறார். அவர் நம்மைத் தமது சாயலில் உருவாக்கி, நமது குமாரன் மூலமாக நம்மை மீட்டு அவரோடு சம்பாஷிக்கவும், அதன் மூலம் மிகப்பெரிய மகிமையையும் இரட்சிப்பையும் கண்டுகொள்ளவும் செய்திருக்கிறார். ஆனால் இந்த தெய்வீக சாவகாசத்தை நாம் எப்படி பயன்படுத்துகிறோம்? ஐந்து நிமிடம் மட்டுமே ஜெபிக்கிறவர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு ஜெபிக்க நேரமில்லை என்கிறார்கள். அவர்கள் ஜெபிப்பதின் சந்தோஷத்தை அறியாதவர்கள்.

அவர்களுக்குத் தங்கள் விருப்பங்களை நிறைவேற்ற சமயமிருக்கிறது. அதற்காகத் தியாகம் செய்ய மகிழ்ச்சியுடன் முன்வருகிறார்கள். ஆனால் தேவனோடு உறவாடி அவரோடு மகிழ்ந்திருக்க அவர்களுக்கு சமயமில்லை.

அவரோடு உறவாட சமயமில்லை என்பது அவரைக் கனவீனப்படுத்துவதாகும்.

ஆவிக்குரிய குறைபாடு

இது ஒரு ஆவிக்குரிய குறைபாடு. அது நாம் மாம்சத்திற்கு அடிமைப்பட்டிருப்பதைக் காண்பிக்கிறது. நாம் வாழ்கிறோம் என்பதற்கு அடையாளமாகிய நாடித்துடிப்பு ஜெபம். இதன் மூலமாகவே நமது இருதயம் எப்படி இயங்குகிறது என்பதனைக் கண்டறிய முடியும். **ஜெபக்குறைவு கிறிஸ்தவனது ஆத்துமா சாவுக்கேதுவான நோயிலும் பெலவீனத்திலும் இருப்பதைக் காட்டுகிறது.**

சபை தனது அழைப்பை நிறைவேற்ற முடியாத அளவு பெலவீனமாகவும், அங்கத்தினர் மேல் தாக்கத்தை ஏற்படுத்த முடியாமலும், அவர்களை உலக சக்திகளிலிருந்து விடுவித்து தூய அர்ப்பண வாழ்விற்கு நடத்த முடியாமலும் இருக்கிறது. இரட்சிக்கப்படாத இலட்சக்கணக்கான மக்கள் மீது அக்கரையில்லை. எனவே கிறிஸ்து அவர்களிடம் ஒப்படைத்த மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பையும், அவரால் வரும் இரட்சிப்பையும் கூறி அறிவிக்கவில்லை.

நாம் செய்ததும் செய்யத் தவறியதுமான காரணங்களால்தான் தேசம் இன்று இந்நிலைக்கு வந்திருக்கிறது.

ஆயிரக்கணக்கான ஊழியர்களிருந்தும் ஏன் பெரிய தாக்கம் ஏற்படவில்லை? ஜெபக்குறைவு ஒன்று தானே காரணம். வேதத்தைப் படிப் பதிலும், சபைப் பணியிலும், உத்தமமாய் பிரசங்கித்தும் மக்களோடு சம்பாஷித்தும் இடைவிடாமல் ஜெபிப்பதில் குறைவு படுவதால், வாக்குப் பண்ணப்பட்ட ஆவியானவரையும், பரத்தின் வல்லமையையும் இழந்துபோக நேரிடுகிறது.

ஜெபிக்காத ஊழியர்கள்

ஜெபிக்காத ஊழியர்களால் சபை பாதிப்படைகிறது. ஊழியக்காரர் விசுவாசிகளை ஜெபவாழ்வில் பயிற்றுவிக்க வேண்டும். ஆனால் தேவனோடு சம்பாஷிப்பதில் குறைவுபடும் ஒரு தலைவர், பரலோகத்திலிருந்து ஆவியான வரைப் பெறக் கூடுமா? அவரது கிருபைதான் கிட்டுமா? அதனைத் தன் பணியில் செயல்படுத்த முடியுமா?

சபை மக்கள் ஜெபிக்க ஊழியர்களில் முழுமையான ஒரு மாற்றம் வேண்டும். அவர்கள் பிரசங்கிப்பதும், மக்களை சந்திப்பதும், சபை வேலையைச் செய்வதும் போதாது. ஜெபத்தின் மூலம் தேவனோடு உறவை ஏற்படுத்தி, பரத்தின் வல்லமையால் நிரப்பப்படுவது இன்றியமையாததாகும் என்பதனை உணரவேண்டும். அவர்கள் வசனத்தின் மூலம் தீமையின் வேரைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்போது தைரியத்துடனும், சந்தோஷத்துடனும், விடாமுயற்சியுடனும் விசுவாசத் துடனும் தேவனோடு நடக்கலாம்.

கிறிஸ்துவின் மூலம் வெற்றி

ஜெபக் குறைவிலிருந்து விடுபடுவது எப்படி? மனித முயற்சியால் இது கூடாதது. எளிய விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஜீவனுள்ள தேவனோடுள்ள தொடர்பு சரியாயிருக்க வேண்டும். அவரது பிரசன்னத்தில் வாழ்ந்து, அவர் அன்பில் மகிழ்ந்து, அவரில் இளைப்பாற வேண்டும். இதுவே ஜெப வாழ்வினை சாத்தியமாக்கும் வழி.

ஜெபக்குறைவு நம்மிலிருக்கு மட்டும் நாம் ஆண்டவரோடு நல்ல உறவிலிருக்கிறோமென்று நம்மை நாமே தேற்றிக் கொள்ளக்கூடாது. ஆண்டவரோடுள்ள உறவு மிகவும் இன்றியமையாததும் மேலானதுமாகும். அதற்கு ஜெபம் முக்கியமானது. நாம் வாஞ்சையோடும், வல்லமையோடும் தேவ சித்தத்தின்படியும் ஜெபிக்க வேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் மாம்ச பெலத்தில் மாம்சத்தை ஜெயிக்க முற்படுகிறோம், இது கூடாதது. பெயல் செபூலைக் கொண்டு பெயல்செபூலைத் துரத்த முடியுமா? அதுவும் முடியாது. இயேசு ஒருவர் மட்டுமே மாம்சத்தையும் பிசாசையும் மடங்கடிக்க முடியும்.

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

எனவே நமது பெலனைக் கொண்டு முயற்சிக்காமல் நம்மை இயேசுவின் பாதத்தில் அர்ப்பணிக்க வேண்டும். அவர் நம்மோடிருந்து நம்மில் கிரியை செய்கிறார் என்ற உறுதியுடன் காத்திருப்போம்.

ஜெபக்குறைவிலிருந்து விடுதலை என்பது கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பு என்று சொல்லலாம். அது புதிய உடன்படிக்கையின் ஒரு ஆசீர்வாதம். அதை இயேசுக்கிறிஸ்து மூலம் தேவன் ஒருவரே அளிக்க முடியும். அவர் தமது அன்பை உங்கள் இருதயங்களில் ஊற்றி ஜெபிப்பதற்கான கிருபையை அருளுவார். பிற பாவங்கள் எல்லாவற்றிலுமிருந்து கழுகுவதுபோல ஜெபக்குறையையும் அகற்றுவார். எனவே சுய பெலத்தால் வெற்றியைத் தேடாமல் எல்லாவற்றிற்காகவும் அவரையே எதிர்பார்க்க வேண்டும். ஜெபத்தின் மூலம் எல்லாக் கிருபைகளையும் பெற்றுக் கொள்வது போல ஜெபிக்கும் இருதயத்தையும் பெறலாம். ஆண்டவர் நம் உள்ளிந்திரியங்களை கவனித்துக் கொண்டிருக்கிறார். ஜெபிக்கும்படி நமக்குப் போதிக்கவும் அவர் ஆயத்தமாயிருக்கிறார். ஒரு குழந்தையைப் போன்ற விசுவாசத்துடன் அவருக்காகக் காத்திருக்க வேண்டும்.

குறைவுபட்ட வாழ்விலிருந்து குறைவுபட்ட ஜெபம் மட்டுமே எழும்ப முடியும். இந்த நிலையிலிருந்து கொண்டே அதிகமாகவோ, நன்றாகவோ ஜெபிக்க முயற்சிப்பது கூடாது. வேத வாக்கியங்கள் கிறிஸ்துவின் அளவில்லாத அன்பை நமக்குப் போதிக்கின்றன. அந்த அன்பு நம்மோடு உறவு கொண்டு ஒவ்வொரு வினாடியும் அவரது ஐக்கியத்தினை அனுபவிக்கத் தூண்டுகின்றது.

கிறிஸ்து மிகச்சிறந்த மன்றாட்டு வீரர். தனது சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் ஜெபத்தின் மூலம் மகிழ்வோடும் வல்லமையோடும் தொடர்பு கொள்ள விரும்புகிறார். கிறிஸ்துவின் இரத்தத்தாலும், கிருபையாலும் அனைத்து அநீதியிலிருந்தும், ஜெபக்குறைவிலிருந்தும் நமக்கு விடுதலை உண்டு. மீட்பு சமயா சமயங்களில் பயன்படுத்தப்படுவதற்குரியதல்ல. அது கிருபையின் நிறைவு. ஆண்டவராகிய இயேசுவில் அது சேமித்து வைக்கப்பட்டது. அதன் மூலம் ஒவ்வொரு நாளும் ஆண்டவரோடு புதிய உறவுடன் மகிழ்ந்திருக்கலாம்.

கவலையீனத்திலிருந்து நம்மைப் பாதுகாக்கவும், வல்லமையுள்ள ஜெப வாழ்வில் தொடரவும் ஆண்டவராகிய இயேசுவோடு நெருங்க வேண்டும். இந்த நெருங்கிய ஆவிக்குரிய தனிப்பட்ட தங்கு தடையற்ற உறவு நமது ஜெப வாழ்வில் வெளிப்படும். தன்னை சிலுவைக்கு வழிநடத்திய அந்த நித்திய அன்பு ஒவ்வொரு வினாடியும் அவரோடு இணைந்திருக்க எதிர்பார்க்கிறது. அவர் மன்றாடுவதற்கு வல்லமையளிப்பவர்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இவ்வாறு ஜெபிக்க அவர் தாங்குகிறார். வேறு எந்த வேலையாலும் அவரைத் திருப்திப்படுத்த நினைப்பது வீண். நாம் உலகில் நிறைவேற்ற வேண்டிய ஒன்று ஜெபம் என்றால் மிகையல்ல.

தூய ஆவியானவரின் பணி

தூய ஆவியால் நிரம்பியிருங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, ஜெப ஆவியால் நிரம்பியிருங்கள் என்று கூறலாம். ".....அப்பா, பிதாவே என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்" ரோ.8:15. "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிற படியினால், அப்பா, பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக தேவன், தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" கலா.4:6. ஜெபத்தில் நாமும் அவரும் இணைந்துவிடுகிறோம்.

ஜெபம் மிகவும் இயற்கையான தாகவும், ஒரு குழந்தை உலகத் தந்தையிடம் அழுது கேட்பது போலவும் இருக்க தேவன் விரும்புகிறார். ஒவ்வொரு ஜெபத்திலும் திரியேக தேவனுக்குப் பங்குண்டு. பிதா ஜெபத்தைக் கேட்கிறார், குமாரனது பெயரில் நாம் ஜெபிக்கிறோம். ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

வெற்றியின் ஆசீர்வாதம்

ஜெபக்குறைவாகிய பாவத்திலிருந்து விடுதலை பெறுவது விவரிக்க முடியாத ஆசீர்வாதம். ஜெபக்குறைவால் ஏற்பட்ட நிந்தை, சுயக்குற்றச்சாட்டு ஆகியவை நீக்கப்பட்டு ஆசீர்வாதம் நிரம்புகிறது. தேவனுடைய சர்வ வல்ல கிருபை நம்மில் ஏற்படுத்திய மாற்றத்தால் வந்த ஆசீர்வாதமான உணர்வு, நாம் அவரது சாயலைப் பெற்றிருக்கிறோம் என்றும், அவரோடுள்ள தொடர்பில் நிலைத்திருந்து, அவரை மகிமைப்படுத்த ஆயத்தமாகிவிட்டோம் என்பதனை உறுதிப்படுத்துகிறது. நமது ராஜாவின் உத்தம பிள்ளைகளாயிருப்பது எத்தனை ஆசீர்வாதமானது! அவரது பண்புகளை நாம் வெளிப்படுத்துகிறோமே.

நமது உள்ளான இருதயத்தில் ஜெபவேளை எத்தனை மகிழ்வானது! தேவன் தாமே இந்தக் கிருபையை நமக்கு அருளிச் செய்வாராக. உலகத்திற்கே ஆசீர்வாதத்தை அளிக்கும் ஊற்றுகளாக நம்மை ஆக்குவாராக.

ஜெபம் என்பது நீங்கள் விரும்புவதை தேவன் அளிப்பதற்கான தருணமல்ல. அது நாம் தேவ சமூகத்திலிருப்பதும் அவர் தமது கிருபையால் தமது இருதயத்திலும் உள்ளத்திலுமிருப்பதை நமக்கு வெளிப்படுத்துவதே ஜெபம்.

உண்மையான சபை

The true church

J.C.Ryle (1816-1900)

இரட்சிப்பை உடைய உண்மையான சபையின் அங்கமாக நீங்கள் இருப்பதை நான் விரும்புகிறேன். நீங்கள் ஓய்வு நாளில் எந்த சபைக்கு போகிறீர்கள் என்பதல்ல, நீங்கள் ஒரே உண்மையான சபையின் அங்கமா? என்பதுதான் கேள்வி.

இந்த உண்மையான ஒரே சபை எங்கிருக்கிறது? அந்த சபை எப்படிப் பட்டது? எந்த அடையாளங்கள் மூலம் இந்த சபையை கண்டுகொள்ளலாம்?

உண்மையான ஒரே சபையிலுள்ள அனைத்து அங்கத்தினர்களும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பார்கள். அது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் கூட்டம். சகல ஆண்களும் பெண்களும் மனந்திரும்பினவர்களாயிருப்பதால் அவர்கள் அனைவரும் உண்மைக் கிறிஸ்தவர்கள். அவர்கள் பிதாவாகிய தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். குமாரனின் இரத்தம் அவர்கள் மீது தெளிக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியால் அவர்கள் சுத்திகரிக்கப்பட்டவர்கள். இப்படிப்பட்டவர்களே கிறிஸ்துவில் உண்மையான சபையின் அங்கத்தினர்.

அனைத்து அங்கத்தினரும் ஒரே விதமான அடையாளமுடையவர்கள். அவர்கள் ஆவியினால் மறுபடியும் பிறந்தவர்கள். ஆண்டவருக்கு நேராகத் திரும்பினவர்களாகையால் அவர்மேல் விசுவாசமுள்ளவர்கள் அப்.20:21. வாழ்விலும் வார்த்தையிலும் தூய்மையுடையவர்கள். பாவத்தை வெறுத்து, கிறிஸ்துவில் அன்பு கூருகிறவர்கள். அவர்கள் வெவ்வேறு விதமாக ஆராதனை செய்தாலும் ஒரே மனதோடு ஆராதிப்பார்கள். ஒரே ஆவியினால் நடத்தப்படுகிறவர்களும் ஒரே அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள். அவர்கள் மார்க்கத்தின் ஆதார புஸ்தகம் வேதபுஸ்தகம். அவர்கள் அனைவருடைய மையம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவர்கள் ஏகமனதுடன் கூடி அல்லேலூயா ஆமென் என்று ஆர்ப்பரிப்பார்கள்.

அந்த சபை இப்பூமியில் எந்த அதிகாரத்திற்கும் கீழ்ப்பட்டதல்ல. ஆனாலும் சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு கனத்தை செலுத்துவார்கள். இதற்கு ஒரே தலைவர், ஒரே மேய்ப்பன். ஒரே அத்தியட்சர், அவர் இயேசு கிறிஸ்து. அவர் தமது ஆவியால் தமது சபையின் அங்கத்தினரை அனுமதிக் கிறார். இதற்கு ஊழியக்காரர் வழிகாண் பிக்கலாம். அவர் வாசலைத் திறக்கு மட்டும் இவ்வுலகின் எந்த மனிதரும் அதைத் திறக்க முடியாது. ஒருவன் மனந் திரும்பி சுவிசேஷத்தை விசுவாசிக்கும் போது உடனே அவன் அந்த சபையின் அங்கமாகிறான்.

இச்சபை சட்டதிட்டங்களை முக்கியப்படுத்துவதில்லை. சடங்காச்சாரங்கள், சபைக் கட்டிடங்கள், சபைகள், சிற்றாலயங்கள், பீடங்கள் மற்றும் உபகரணங்கள், பணம், அரசர்கள், அரசாங்கங்கள், நீதிபதிகள்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

போன்ற எதற்கும் கட்டுப்பட்டதல்ல. இவையெல்லாம் இல்லாமலேயே சபை தொடர்ந்து வாழக்கூடியது. சிலவேளைகளில் இது வனாந்தரத்திற்கும், குகைகளுக்கும் துரத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் பிரசன்னத்தாலும் அவரது ஆவியாலும் சபை நிலைநிற்கிறது. இக்காரணங்களால் சபை மரிப்பதில்லை.

வேதவசன தலைப்புகளான தற்கால மகிமை, வாய்ப்புகள், வாக்குத்தத்தங்கள், எதிர்கால மகிமை ஆகியவை வேத வசனங்களில் விளக்கப்படுகின்றன. சபையானது கிறிஸ்துவின் சரீரம், கிறிஸ்துவின் மந்தை, விசுவாச வீட்டார், தேவனது குடும்பம் என்ற பெயர்களை உடையது. மேலும் தேவனுடைய கட்டிடம், அவரது அஸ்திபாரம், தூய ஆவியானவரின் ஆலயம் என்றும் அழைக்கலாம். இது முதற் பேறான வர்களின் சபை. அவர்களுடைய பெயர் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் இராஜரீக ஆசாரியக்கூட்டம். விலைக்கிரயத்துக்குக் கிறிஸ்துவால் கொள்ளப்பட்டவர்கள். தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் தலைமுறை, விசேஷித்த ஜனம், விலைக்கு வாங்கப்பட்ட பொக்கிஷம். தேவனுடைய வாசஸ்தலம். உலகத்தின் ஒளி. பூமியின் கோதுமை என்ற பெயர்களெல்லாம் இதற்குரியவை. அப்போஸ்தல விசுவாசத்தின்படி இது பொதுவான அப்போஸ்தல திருச்சபை. திசெயா விசுவாசப் பிரமாணத்தின்படி 'பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை' மேலும் "இதோ உலகத்தின் முடிவு பரியந்தமும் சகல நாட்களிலும் உங்களுடனே இருக்கிறேன்" மத்.16:18, 28:20 என்று வாக்களிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒரே சபைதான் உண்மையான ஒற்றுமையுடையது. இதன் அங்கத்தினர் ஒரே ஆவியானவரால் போதிக்கப்பட்டிருப்பதால் ஒரே கருத்துடையவர்கள். தேவன், கிறிஸ்து, ஆவியானவர், பாவம், விசுவாசம், மனந்திரும்புதல், தூய்மையின் அவசியம், வேத புத்தகத்தின் விலை மதிப்பு, ஜெபத்தின் முக்கியத்துவம், உயிர்த்தெழுதல், வரப்போகும் நியாயத்தீர்ப்பு போன்ற எல்லாவற்றிலும் இவர்கள் கருத்து வேறுபாடற்றவர்கள். உலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் வாழும் இரண்டோ மூன்றோபேரைத் தெரிந்து கொண்டு தனித்தனியாக அவர்களைப் பரிசோதித்தால் அவர்கள் ஒரே கருத்தினைத் தெரிவிப்பதை நாம் காணலாம்.

இந்த சபை உத்தம பரிசுத்த வாழ்வைக் கொண்டது. தொழிலிலோ, பெயரிலோ, தயாளத்திலோ மட்டுமல்ல அவர்கள் நடைமுறையிலும் கிரியைகளிலும் உண்மை வாழ்விலும், உத்தமத்திலும் பரிசுத்தவான்கள். ஏறக்குறைய இயேசுவின் சாயலை உடையவர்கள்.

இந்த ஒரே சபைதான் உண்மையான சகிப்புத்தன்மை உடையது. இதன் அங்கத்தினர் உலகின் எப்பகுதியில் காணப்பட்டாலும் எங்கும் அரசாங்கத்திற்கோ, அதிகாரங்களுக்கோ கட்டுப்பட்டவர்களல்ல. இவர்கள் வெவ்வேறு பெயர்களுடனும் வெவ்வேறு பாஷைகளுடனும் வாழ்ந்தாலும் இயேசு கிறிஸ்துவில் ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பார்கள்.

இது உண்மையான அப்போஸ்தல சபை. அப்போஸ்தலர்களால் அஸ்திபாரமிடப்பட்டு அவர்கள் பிரசங்கித்த உபதேசத்தைப் பற்றிக் கொண்டுள்ளது. இதன் அங்கத்தினரின் நோக்கம் அப்போஸ்தலரின் விசுவாசமும் அவர்களின் பயிற்சியுமாகும். பேச்சில் மட்டுமல்ல செயலிலும் உறுதியான சபை. கடைசிமட்டும் சகித்து நிற்க கூடியது. எந்த சக்தியுமே இதனை அழிக்கவோ கவிழ்க்கவோ கூடாது. இதன் அங்கத்தினர் துன்புறுத்தப்பட்டாலும், நசுக்கப்பட்டாலும், சிறையிலடைக்கப்பட்டாலும், அடிக்கப்பட்டாலும் அவர்கள் தலை வெட்டப்பட்டாலும், உடல் சுட்டெரிக்கப்பட்டாலும் சபை அழியாது. இது துன்பங்களிலிருந்து எழுந்து, தீயையும் தண்ணீரையும் கடந்து வரக்கூடியது. ஒரு தேசத்தில் அது தாக்கப்பட்டால் இன்னொரு தேசத்தில் அது எழும்பும். பார்வோன்கள், ஏரோதுகள், நீரோக்கள், இரத்தவெறி கொண்ட தலைவர்கள் சபையை அழிக்கக் கடுமையாக உழைத்தும் அவர்கள் தங்கள் இடத்துக்கே திரும்பிச் சென்றுவிட்டனர். ஆனால் உண்மை சபை நிலைத்திருக்கிறது. இவ்வாறு எழும்பி அனேக சுத்தியல்களை உடைத்த கருவி சபை. இன்னும் இப்படிப்பட்ட வைகளை நொறுக்கும். இது அடிக்கடி எரிந்தும் அவிந்து போகாத செடி.

இச்சபை, பூமியில் கிறிஸ்து செய்த பணியைத் தொடரும். இதன் அங்கத்தினர் ஒரு சிறு மந்தைதான். உலக மக்களோடு ஒப்பிடும்போது அதன் எண்ணிக்கை மிகக் குறைவுதான். ஆனால் இவர்கள் உலகத்தை அசைக்கிறவர்கள். தங்கள் ஜெபத்தால் ராஜ்யங்களின் எதிர்காலத்தை மாற்றியவர்கள். தூய்மையும் பழுதற்றதுமான மார்க்கத்தை அறிவிக்கிறவர்கள். அரசுகளின் ஜீவரத்தம் என்றும் தேசங்களின் ஆதர வாளர்கள் என்றும் இவர்களைக் குறிப்பிடலாம்.

முடிவில் மகிமையடைவதும் இந்த சபையே. உலகமனைத்தும் கடந்து போன பின்பும் சபை பிதாவின் சிங்காசனத்துக்கு முன்பாக பழுதற்றதாக நிறுத்தப்படும். சிங்காசனங்கள், அதிகாரங்கள் போன்றவை கடந்து போய் விடும். ஆனால் ஆதியிலேயே பிறந்த இச்சபை நட்சத்திரங்களைப் போல பிரகாசிக்கும்.

சிறிய ஜெபங்கள் போதாது. பாரம் நிறைந்ததும், இடைவிடாததும், போராடுகிறதுமான ஜெபம் தேவை.

மார்ச் உபவாச ஜெபம்

பெரும்மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய அன்பு சகோதரர் அவர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் வாழ்த்து தலையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராஜாவுடைய தோட்டத்தில் பணிபுரிகிற பெரிய கிருபையை ஆண்டவர் நமக்கு தந்திருக்கிறார். தேசத்தின் எழுப்புதலுக்காக தங்களையும் தேவன் பயன்படுத்துவதை எண்ணி துதிக்கிறேன். வருகின்ற மார்ச் மாதம் இரண்டாவது சனிக்கிழமை (12.03.2022) எங்கள் மீரான்குளம் பரி.மத்தியாவின் ஆலயத்திற்கு நீங்களெல்லாம் வருவதை அறிந்து ஆண்டவரை துதிக்கிறேன். உங்களது வருகையும் தேவனுடைய சித்தமே அந்நாளில் எங்கள் கிராமத்தின் எழுப்புதலுக்கு ஆசீர்வாதமாயிருக்கட்டும். எங்களது கிராமத்திற்காக, கிராமத்தின் இரட்சிப்பிற்காக, கிராமத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாக ஜெபித்துக் கொள்ளுங்கள். கூட்டத்தின் முன் ஆயத்தம் ஏதாவது செய்ய வேண்டுமானால் முன்கூட்டியே தெரியப்படுத்தவும். ஆலயத்தில் ஒலி ஒளி பெருக்கி உண்டு. கூட்ட முடிவில் வருகின்ற அனைவருக்கும் ஒரு சிறிய ஐக்கிய விருந்து உண்டு. நீங்கள் நிகழ்ச்சிநிரலில் போடப்பட்டதின்படி தேநீர் உண்டு. ஆயத்தங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். ஆண்டவர் அந்நாளில் பெரிய காரியங்களை செய்வாராக.

நன்றி.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

நாம் செய்ததும் செய்யத் தவறியதுமான காரணங்களால்தான் **தேசம்** இன்று இந்நிலைக்கு வந்திருக்கிறது.

உங்கள் **ஜெபவாழ்வும்** சபையின் ஜெபவாழ்வும் சரித்திரத்தின் போக்கைத் தீர்மானிக்கவும், அழிவுக்கான அனேக விசைகளை தேசத்திலிருந்து அகற்றவும் ஏதுவாகும்.

தேசம் ஒரு இக்கட்டான கால கட்டத்தில் இருப்பதை எண்ணிப் பார்க்கிறீர்களா? அவரையும் அவரது இருதயத்தையும் அறிந்தவர்களும் ஜெபத்தில் பாரமுள்ளவர்களுமான மக்கள் மூலம் ஒரு பலத்த தொடுதல் ஏற்படுமட்டும் ஜெபிக்கிறவர்கள் வேண்டும். சிறிய ஜெபங்கள் போதாது. பாரம் நிறைந்ததும், இடைவிடாததும், போராடுகிறதுமான **ஜெபம்** தேவை.

ஜெபம் என்பது நீங்கள் விரும்புவதை தேவன் அளிப்பதற்கான தருணமல்ல. அது நாம் தேவ சமூகத்திலிருப்பதும் அவர் தமது கிருபையால் தமது இருதயத்திலும் உள்ளத்திலுமிருப்பதை நமக்கு வெளிப்படுத்துவதே

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason